**முலடியன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 09 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து முலடியன பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான மாகந்துர வாராந்தச் சந்தை மற்றும் கடைகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,444,855 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 205,589 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை இனங்கண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | முன்னைய ஆண்டு இறுதியளவில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 1,193,249 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மீதியை உறுதிப்படுத்திய பின்னர் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 157,704,256 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளின் படி காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 4,556,221 தொகை ஆகும். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2013 ஆண்டு முதல் மாற்றமின்றி நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 36,289 தொகைக்கான தொங்கல் கணக்கில் செலவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் மீதி ஒன்றாக காணப்பட்டமையால், கண்டறிய முடியாதுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 248,424,741 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புப் பேரேட்டில் மாதாந்தக் கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்குடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விதியின் பிரகாரம் செயற்படுவேன். |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங் களின் உண்மையான செலவுகள், மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப் பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விதியின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 204 | பற்றாக்குறைகள் தொடர்பாக திருப்திகரமான விளக்கம் ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் பண்டங்களின் பெறுமதியை உரிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | கூட்டுத்தொகை ரூபா 243,516 இற்கான காலங் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (இ) | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத் துவ அமைச்சுச் செயலாளரின் 30/2016 மற்றும் 2016 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டில் செயற்படுவேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 429,840 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 6,673,497 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,341,332 | 1,432,693 | 1,435,706 | 73,218 | 626,000 | 1,393,058 | 1,393,058 | 76,231 |
| வாடகை | 11,287,400 | 5,445,270 | 6,199,638 | 630,816 | 4,445,600 | 4,963,939 | 4,057,086 | 1,385,184 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,250,180 | 524,905 | 524,905 | 10,450 | 1,100,540 | 597,502 | 597,502 | 10,450 |
| ஏனைய வருமானங்கள் | 13,875,770 | 9,071,437 | 12,330,743 | 13,487,902 | 12,188,750 | 12,482,503 | 10,653,369 | 16,747,208 |
| மொத்தம் | 27,754,682 | 16,474,305 | 20,490,992 | 14,202,386 | 18,360,890 | 19,437,002 | 16,701,015 | 18,219,073 |

## 2.2.2 வீத வரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| சபையினால் வீதவரி அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் பிரதேசங்களை இனங்கண்டு சபை பிரேரணை ஒன்றின் மூலம் அங்கீகரித்து அதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) இன் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்று தொடர் நடவடிக்கை எடுத்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்யக் கூடிய ஆதனங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டின் போது முன்னேற்றப்பட்ட கிராமப் பிரதேசங்கள் என பகிரங்கப்படுத்துவதற்கு உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 83,528 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 21,683 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 105,136 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 31,918 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 73,218 தொகை நிலுவை மீதி காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | வருமானப் பரிசோதகரினால் குறிப்பிட்ட தரப்பினருடன் கலந்துரையாடி நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம் தபபா/பபாகொ/2010/01 இன் 6 ஆம் பந்தியின் பிரகாரம் 5 வருடங்களுக்கு ஒருமுறை மதிப்பீட்டு வாடகையை புதிய மதிப்பீடு ஒன்றின் மூலம் திருத்தப்பட வேண்டும் எனினும் மாகந்துர வாராந்த சந்தையில் 29 கடைகள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2008 இன் பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கடை வாடகை அறவிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விரைவாக பெறுமதி மதிப்பீட்டு வாடகையை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடம் விண்ணப்பித்துள்ளேன். |
| (ஆ) | மாகந்துர வாராந்த சந்தையில் 10 கடைகளில் இருந்து 2016 ஆண்டுக்கு முன்னர் இருந்து நிலுவையாக காணப்பட்ட ரூபா 318,850 இற்கான தொகை யொன்றினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 489,651 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 12,998,251 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகை பெற்றுக் கொள்வதற்காக பிரதான செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப் பகுதியில் தென் மாகாண அபிவிருத்தி ஏற்பாடுகளின் கீழ் 08 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,670,583 இற்கான தொகை ஒன்று சபைக்குக் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப் பட்ட நிர்மாண வேலைகளை விரைவாக நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முலடியன பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகளின் பராமரிப்பு அலுவல்களை பிரதேச சபைக்கு சாட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையின் மாத்தறை பிரதான மின்சார பொறியியலாளர் இலக்கம் தப/மா/லி/10/வீதி விளக்கு பராமரிப்பு மற்றும் 2019 மார்ச் 26 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமையினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப் பட்டிருந்த 1454 வீதிவிளக்குகளின் பராமரிப்புச் செலவு ரூபா 1,112,300 தொகையினை மீளளிப்புச் செய்வதற்கு முடியாதிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |
| (ஆ) | 2019 ஜனவரி 27 ஆந் திகதி சபைக்கு சொந்தமான கப் வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகி திருத்த வேலைக்காக ரூபா 2,326,177 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், காப்புறுதியினால் உள்ளடக்கப்படாத ரூபா 188,120 இற்கான தொகை சாரதியிடம் அறவீடு செய்வதற்கு நி.பி.104(1) இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்க வில்லை. மேலும் விபத்துக்கு பொறுப்பான சாரதி தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாமல் சபைக்கு சொந்தமான 03 வாகனங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | உரிய தரப்பினரிடம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்த எழுத்துமூல அறிவுரையின் படி தொடர்நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 29 நிறுவனங்கள் காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களினால் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதம் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 127,600 தொகை அறவிடப்பட்டி ருக்கவில்லை. | தகைமைகளை பரிசோதனை செய்து விரைவாக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைககள்** | | |
| | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 06 மிகை பதவியணியினை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகை உத்தியோகத்தரின் கீழ் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி உள்ளூராட்சி திணைக்களத் தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றாகும். மீதியான மிகைப் பதவிக்காக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படு வதுடன் ஆரம்ப தரத்தில் 2020 ஜனவரி 22 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் வெற்றிடங்களுக் கான ஆட்சேர்ப்பு மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்ததால், அதற்கமைவாக செயற்படுவேன். |
| (ஆ) | சபையின் மின் தொழிநுட்ப வியலாளர் பதவிக்காக சபையின் வெளிக்கள வேலை தொழிலாளர் ஒருவரை ஈடுபடுத்தி காப்புறுதி உள்ளடக்கம் பெறுவதற்காக காப்புறுதிக் கட்டணமாக ரூபா 22,318 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மின்சார தொழிநுட்பவியலாளர் பதவியில் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக தகைமை பெற்றமைக்கான சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து சான்றிதழ்களை பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | NVQ 3 சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக 2019 திசெம்பர் 02 ஆந் திகதி குறிப்பிட்ட பரீட்சையில் தேறியுள்ளார் என அந் நிறுவனத்தினால் அறிவித்திருந்ததுடன், குறிப்பிட்ட சான்றிதழ் கிடைத்திருக்க வில்லை. |

(இ) ஊழியர் பிணை

| | | |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 180 இன் பிரகாரம் பிணைகள் பெற்றுக் கொள்ள வேண்டிய 05 உத்தியோகத்தரிடம் பிணை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல்வேறு தொலைபேசிக் கம்பனிகளினால் நிறுவப்பட்டிருந்த 08 செலுத்துகை கோபுரங்களுக்காக உரிய கட்டணம் அறவீடு செய்து அங்கீகாரம் வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 06 செலுத்துகை கோபுரங்களில் இருந்து வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர் நடவடிக்கை மேற்கொள்வேன். |

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| தென் மாகாண மீன்பிடி, சுற்றாடல் அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் மீது மூலடியன நகரத்தின் பசுமை வலயம் மற்றும் சுற்றாடல் அலங்காரத்திற்காக ரூபா 172,700 தொகை செலவிடப்பட்டு தயாரிக்கப் பட்டிருந்த 30 பூக்கொடி ஆதரவு கம்பங்கள் குறிப்பிட்ட நியமத்தில் காணப்படாததுடன் கம்பங்களில் குறிப்பிட்ட உயரம் காணப்படாமை, மின்விளக்குகள் மற்றும் மின் உபகரணங்கள் பொருத்தப்படாமல் இருக்கும் போது தொழிநுட்ப உத்தியோகத்தரினால் கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. பூக்கன்றுகள் உரிய முறையில் பராமரிக்கப் படாமையால் குறிப்பிட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பண்டக் கொள்வனவு ஒன்று என்பதினால் அதற்காக அனைத்து விவரக் குறிப்புகளும் வரைபுகள் மூலம் வழங்கப்பட்டதுடன், கொள்வனவு செய்யும் பண்டங்களுக்காக மதிப்பீடு தயாரித்தல் தொழிநுட்ப சேவை உத்தியோகத்தருக்கு முடியாமை அல்லது அதிகாரம் இன்மை ஆகிய காரணங்களினால் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக் காததுடன் கணக்காய்வு அவதானிப்பு மேற்கொள்ளப் பட்ட காலப்பகுதி மழை இன்றிய கோடை காலம் ஆக இருந்ததுடன் பூக்கொடிகளின் வளர்ச்சி வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. |